ஸ்ரீ:
விகாரி வூஸ தை மீ
ஜனவரி 2020 - பிப்ரவரி 2020

மலர்: 2
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்






MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com









தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்







ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்

ஸ்ரீ:

விகாரி ஸூ தை மீ
ஜனவரி 2020 - பிப்ரவரி 2020

மலர்: 2
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Rajagopalan Madhavan, Sri K. Akash & Sri P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

மார்கழி மாதம் வெறும் திங்களாக இருக்கும் நிலையில் தை மாதம் 'ஒரு' (அத்விதீயமாக – ஒப்பற்றதாக) திங்களாக அமைகிறதே! உத்ஸவங்களும் பண்டிகைகளும் தேனாகத் தொடர்கின்றனவே. தமிழ்ப் புத்தாண்டுக்குச் சமமாக அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் தருணம் அல்லவா!! இதற்கு நிகராக நம் 'தேசிக ஸந்தேச' ஸஞ்சிகையும் விசேஷ ஒளிப்படங்கள் மூலம் கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தாக அளிக்கும் காக்ஷிகள் இதோ:

- ✓ தொண்டரடிப்பொடி ஆழ்வார் சாற்றுமறை உத்ஸவம்
- ✓ பகல் பத்து உத்ஸவம் - சாற்றுமறையுடன்
- ✓ வைகுண்ட ஏகாதசி உத்ஸவம்
- ✓ ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்
- ✓ இராப்பத்து உத்ஸவம்
- ✓ திருப்பாவை உபந்யாஸம்
- ✓ 'பத்ததி' இசை விழா
- ✓ ஸ்ரீமதழகியசிங்கர் / ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் / ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம் (டோலையுடன்)
- ✓ ஆண்டாள் கோஷ்டியின் கோலம் கைங்கர்யம்

இவைகளுடன் விசேஷ வ்யாஸங்கள்.

வழக்கமான மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம், இவைகளும் / தை மாதம் தேசிக பவனத்தில் நடைபெறவுள்ள திருப்பாவை மஹோத்ஸவம் பற்றிய அறிவிப்பு இவைகளும் இடம் பெறுகின்றன.

தொடர்ந்துவரும் ஆங்கிலக் கட்டுரைப் பகுதி, இதிலும் தொடர்கிறது. வாசகர்களின் கருத்துக்களை ஆவலுடன் வரவேற்கிறோம்,

கண்டு வாசித்து இன்புறுமின்!

# விகாரி வருட தை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி / பிப்ரவரி | தை | | | | | |
| 15.01.2020 | 1 | பஞ்சமி | புதன் | பூரம் | உத்தராயண புண்யகாலம் – பொங்கல் பண்டிகை – தை மாதப்பிறப்பு – காலை – பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ் சனம் – இராப்பத்து பத்தாம் நாள், ஊர்கோல உத்ஸவம் மாலை – பெருமாள், ஆண்டாள், ஆழ்வார் திருவீதி புறப்பாடு, ஸேவாகாலம், ஆழ்வார் திருவடி தொழுதல், திருவாய்மொழி சாற்றுமுறை | M/s. சுந்தரம் சாரிடீஸ். இராப்பத்து உத்ஸவ உபயம்: ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு |
| 16.01.2020 | 2 | ஷஷ்டி | வியாழன் | உத்தரம் 3.40 / ஹஸ்தம் | கனு உத்ஸவம் – பெருமாள், தாயார், ஆண்டாள் – ஆஸ்தானம், கூரத்தாழ்வான் சாற்றுமுறை. காலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. மதியம் இயற்பா ஸேவாகாலம், சாற்றுமுறை | கனு உத்ஸவம்: ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா. ஆழ்வார் சாற்றுமுறை: ஸ்ரீ P.V. ராகவன் பண்டு. இயற்பா ஸேவாகாலம்: ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு |
| 17.01.2020 | 3 | ஸப்தமி | வெள்ளி – 1 | சித்திரை | தேசிக ப்ரபந்த சாற்றுமுறை | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு |
| 18.01.2020 | 4 | அஷ்டமி | சனி | ஸ்வாதி | திருப்பல்லாண்டு தொடக்கம் | ஸ்ரீ S.S. ராகவன் |
| 19.01.2020 | 5 | நவமி 01.37 (6.40) / தசமி | ஞாயிறு | விசாகம் | கனு பரிவேட்டை, பெருமாள் லக்ஷ்மீபுரம் எழுந்தருளல் | ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் |
| 20.01.2020 | 6 | ஏகாதசி | திங்கள் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 21.01.2020 | 7 | ஏகாதசி / த்வாதசி | செவ்வாய் | கேட்டை | பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – வீதிபுறப்பாடு (கோயில் ஏகாதசி) | ஸ்ரீ V.R. ஸ்ரீநிவாஸன் |
| 22.01.2020 | 8 | த்ரயோதசி | புதன் | மூலம் | திருமால்வடை | |
| 23.01.2020 | 9 | சதுர்தசி | வியாழன் | பூராடம் | ஸேனைநாதன் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24.01.2020 | 10 | அமாவாசை | வெள்ளி – 2 | உத்தராடம் | பெருமாள்.தாயார் – மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயார் யானை வாஹனம் உள்புறப்பாடு | அமாவாசை: ஸ்ரீ S. நாராயணன். தை வெள்ளி: ஸ்ரீ M.V. ஸந்தானம் |
| 25.01.2020 | 11 | ப்ரதமை | சனி | ச்ரவணம் | காலை – பெருமாள், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் |
| 26.01.2020 | 12 | த்வீதீயை | ஞாயிறு | அவிட்டம் | | |
| 27.01.2020 | 13 | த்ருதீயை | திங்கள் | அவிட்டம் 00.36 / (6.15AM) / சதயம் | பூதத்தாழ்வார் | |
| 28.01.2020 | 14 | த்ருதீயை 03.21 (7.20AM) / சதுர்த்தி | செவ்வாய் | சதயம் 6.30 (8.30AM) | காலை பேயாழ்வார் திருமஞ்சனம். மாலை புறப்பாடு | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் அசோசியேஷன் |
| 29.01.2020 | 15 | சதுர்த்தி 8.26 (9.20AM) | புதன் | பூரட்டாதி | திருமால்வடை. | |
| 30.01.2020 | 16 | பஞ்சமி | வியாழன் | உத்தரட்டாதி | திருமால்வடை. | |
| 31.01.2020 | 17 | ஷஷ்டி | வெள்ளி – 3 | ரேவதி | காலை – பெருமாள், தாயார் – மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். – மாலை – தாயார் கிளி வாஹனம் உள் புறப்பாடு | ஸ்ரீ G. ரங்கராஜன் |
| 01.02.2020 | 18 | ஸப்தமி | சனி | அச்வினி | ரதஸப்தமி – காலை – பெருமாள் ஸூர்யப்ரபை திருவீதி புறப்பாடு – மாலை – பெருமாள் சந்த்ரப்ரபை திருவீதி புறப்பாடு | ஸ்ரீ கொடவாசல் ரங்காச்சாரி & C/o. ஸ்ரீ ஜெயகுமார் |
| 02.02.2020 | 19 | அஷ்டமி | ஞாயிறு | பரணி | திருமால்வடை – வனபோஜன உத்ஸவம். பெருமாள், தேசிகன் பலாத்தோப்பு எழுந்தருளல் | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| 03.02.2020 | 20 | நவமி | திங்கள் | க்ருத்திகை | கலியன் | |
| 04.02.2020 | 21 | தசமி | செவ்வாய் | ரோஹிணி | கண்ணன் ஆஸ்தானம் | |
| 05.02.2020 | 22 | ஏகாதசி | புதன் | ம்ருகசீர்ஷம் | பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – வீதிபுறப்பாடு | ஸ்ரீ M.K. ஸ்ரீதரன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 06.02.2020 | 23 | த்வாதசி | வியாழன் | திருவாதிரை | பாஷ்யகாரர் | |
| 07.02.20 | 24 | த்ரயோதசி | வெள்ளி – 4 | புனர்வஸு | காலை – பெருமாள், தாயார் – மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். – மாலை – தாயார் தங்கக்கேடயம் உள் புறப்பாடு | ஸ்ரீ S. சுந்தரம் |
| 08.02.20 | 25 | சதுர்தசி | சனி | புஷ்யம் | தை புஷ்யம். பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு | ஸ்ரீ வேதபாராயண ஸபா |
| 09.02.2020 | 26 | பௌர்ணமி | ஞாயிறு | ஆயில்யம் | பெருமாள் திருமஞ் சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | |
| 10.02.2020 | 27 | ப்ரதமை | திங்கள் | மகம் | திருமழிசையாழ்வார் சாற்றுமறை. பெருமாள், ஆழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அழிசூர் ஸ்ரீ வீரராகவன் – ஸ்ரீ A.V. ராமன் |
| 11.02.2020 | 28 | த்வீதீயை | செவ்வாய் | பூரம் | ஆண்டாள் | |
| 12.02.2020 | 29 | த்ருதீயை / சதுர்த்தி | புதன் | உத்தரம் | தாயார் திருமஞ்சனம். உள்புறப்பாடு | |

## தை மாதத்தில் முக்கிய உத்ஸவங்கள்

**தை வருஷப்பிறப்பு,**
**ஸங்க்ராந்தி உத்ஸவம்**
**நம்மாழ்வார் திருவடித்தொழல்,**
**இராப்பத்து சாற்றுமுறை**
ஜனவரி 15 (புதன்)

**இயற்பா சாற்றுமுறை**
**கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்**
**கனு உத்ஸவம் ஆஸ்தானம்**
ஜனவரி 16 (வியாழன்)

**தேசிக ப்ரபந்த சாற்றுமுறை**
ஜனவரி 17 (வெள்ளி)

**திருப்பல்லாண்டுத் தொடக்கம்**
ஜனவரி 18 (சனி)

**பரி வேட்டை உத்ஸவம் —**
**பெருமாள் லக்ஷ்மீபுரம் புறப்பாடு**
ஜனவரி 19 (ஞாயிறு)

**ரதஸப்தமி — ஸூர்யப்ரபை (காலை);**
**சந்த்ரப்ரபை (மாலை)**
பிப்ரவரி 1 (சனி)

**வனபோஜன உத்ஸவம் —**
**பெருமாள், தேசிகன் பலாத்தோப்பு புறப்பாடு**
பிப்ரவரி 2 (ஞாயிறு)

**தை புஷ்யம், பெருமாள் தேசிகன் புறப்பாடு**
பிப்ரவரி 8 (சனி)

**திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்**
பிப்ரவரி 10 (திங்கள்)

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# மழிசையர்கோனின் வேங்கடக்கோன்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**திருமழிசைப்பிரானின் ஏற்றம்**

பொய்கையாழ்வார் தொடங்கி கலியன் ஈறாகத் திருமங்கை மணாளனிடம் அநவரதம் காதல் கொண்டு அவன் அநுபவத்திலேயே ஆழங்கால் பட்டதனால் ஆழ்வார்கள் என்று அழைக்கப்பட்டனர். வ்யாஸர், பராசரர் போன்ற மஹரிஷிகளும் எம்பெருமானிடம் பக்திகொண்டு பல தத்வார்த்தங்களை வெளியிட்டருளினாலும், அவர்கள் எம்பெருமானைத் தவிர இதர விஷயங்களையும் தங்களுடைய நூல்களில் காட்ட வேண்டியிருந்தது. ஆனால் ஆழ்வார்கள் தத்தம் பாசுரங்களில் எம்பெருமானைத் தவிர வேறு விஷயங்களை கைக்கொள்ளாததால் அந்த மஹரிஷிகளைக் காட்டிலும் ஆழ்வார்களே நமக்கு ஏற்றம். இவ்விஷயத்தை ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ''மாசில் மனம் தெளிமுனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக்கு ஒவ்வா'' என்று 'ப்ராதாந சதகம்' எனும் நூலில் போற்றிப் புகழ்கிறார்.

பேயாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப்பட்ட திருமழிசையாழ்வார் தை மாதம் மக நக்ஷத்ரத்தில் அவதரித்தவர். முதலாழ்வார்கள் மொழிந்த பரபக்தி, பர ஜ்ஞாந, பரமபக்தி வரையிலான நன்மைகளை உலகத்தாருக்கு எடுத்துக்கூறி திருமாலே எல்லாத் தெய்வங்களிலும் மேம்பட்டவன் எனும் உயர்ந்ததான தத்வத்தை தம்முடைய க்ரந்தங்களான திருச்சந்த விருத்தத்திலும் நான்முகன் திருவந்தாதியிலும் பல ப்ரமாணங்களையும் கொண்டு நிரூபணம் செய்தருளியவர்.

எம்பெருமானிடத்திலேயே ஆராக்காதல் கொண்டதனால் இவரை ''பக்திஸாரர்'' என்று பெரியோர் போற்றுவர். த்வாபர யுகத்திலேயே அவதரித்த இந்த ஆழ்வார் கலியுகத்திலும் வாழ்ந்தவர். திவ்ய தேசங்களில் ஸேவை ஸாதிக்கும் அர்ச்சாமூர்த்திகளின்பால் இவ்வாழ்வாருக்கு அதீதவ்யாமோஹம். குறிப்பாக, திருக்குடந்தை எம்பெருமானும் திருவெஃகா எம்பெருமானும் மஹாஜ்ஞாநியான ஆழ்வார் என்ன வேண்டுகிறாரோ அவ்வண்ணமே ஆமோதித்தானர் என்பது ஆழ்வாரின் சரித்திரத்திலிருந்து அறியலாம்.

இந்த அர்ச்சை திருமேனிகளில் கலியுகக்கடவுளாம் திருவேங்கடமுடையானிடனம் திருமழிசைப்பிரானுக்கு அலாதியான பக்தி. ஆழ்வார் அருளியிருக்கும் நான்முகன் திருவந்தாதியிலிருந்து திருமலைத்தெய்வத்தின்பால் ஆழ்வார் மங்களாசாஸனம் செய்திருப்பதை நாம் சற்று இங்கு அனுபவிப்போம்.

**திருவல்லிக்கேணி மற்றும் சயன திருக்கோல திவ்ய தேசங்கள் அநுபவம்**

நான்முகன் திருவந்தாதியில் பாசுரங்கள் 39 முதல் 48 பாசுரம்வரையில் பத்து பாசுரங்களை ஆழ்வார் திருவேங்கடத் திவ்யதேசத்திற்கு அர்ப்பணித்தார். இதற்கு முன்னர், 35-ம் பாசுரத்தில் நம் மயிலைக்குச் சமீபத்தில் அமைந்துள்ள திருவல்லிக்கேணி எம்பெருமானையும், 36-ம் பாசுரத்தில் சேஷசாயியாக ஸேவை ஸாதிக்கும் அர்ச்சா மூர்த்திகள் அமைந்துள்ள திவ்ய தேசங்களையும் அநுபவிக்கின்றார்.

எம்பெருமான், மாமயிலைப்பதியின் ஸமீபத்தில் நீண்ட அலைகள் அருகே மோதும்படி அமைந்துள்ள கைரவிணீ எனும் குளக்கரையில் திருவல்லிக் கேணியில் ஐந்து தலைகளையும் வாய்களையுமுடைய ஆதிசேஷனின் உடலாம் பள்ளியிலே வாயைத் திறக்காதவனாய் ஒரு வ்யாபாரமுமின்றி, ச்ரமபரிஹாரம் செய்து கொள்வதற்காக சயனித்திருக்கிறான். இப்படி இருப்பதற்குக் காரணம் அவன் காடும் மேடும் கல்லும் கரடும் முரடுமான பூமியை முன்பு வாமனனாய் தன் திருவடிகளினால் அளந்திட்டதின் விளைவாகவோ? என்று வினவுகிறார்.

மேலும், 36-ம் பாசுரத்தில் குடந்தை, வெஃகா, திருஎவ்வுளூர், அரங்கம், அன்பில் போன்ற திவ்ய தேசங்களிலும், பாற்கடலிலும், திருவநந்தாழ்வானாகிற படுக்கையின்மீது பள்ளிகொண்டிருக்கிறான், இந்த புவனத்திற்குக் காரணமான ஸர்வேச்வரன். இப்படி சயனித்திருப்பது எதற்காக எனில் அவனை இந்த திவ்ய தேசங்களில் வந்து அண்டியவர்களின் மனதில் புகுவதற்காக என்று போற்றுகிறார். தாம் அவதரித்த திருமழிசைத் தலத்திற்கு மிக ஸமீபத்தில் இருக்கும் திவ்யதேசமான திருவள்ளூரை இந்தப் பாசுரத்தில் ''திரு'' எனும் அடைமொழியைக் கொண்டு அழைப்பதனால் ஆழ்வார் இந்த எம்பெருமானிடம் மிகவும் அதிகமான ப்ரீதியுள்ளவர் என்று வெளிப்படுகிறது என்று பெரியோர் பணிப்பர்.



**திருவேங்கடவன்பால் கூடலிழைத்தலும், திருவேங்கடத்தை வீடாகப் பெற நினைப்பதும்**

நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் தலைவித் தன்மையை அடைந்து எம்பெருமானிடம் பக்தி செலுத்துவது அனைவரும் அறிந்ததே! ஆனால் திருமழுசையாழ்வார் நாயிகாபாவத்தில் எம்பெருமானை அநுபவிப்பது மிகவும் அறியப் படாதது. திருவேங்கடத்தை மங்களாசாஸனம் செய்யும் முதல் பாசுரத்தில் ஆழ்வார் தாம் தலைவித்தன்மையை ஏறிட்டுக் கொண்டு திருவேங்கடத்தானை பார்வையிட அழைக்கிறார். அந்தத் திருவேங்கடத்தில் மழைபோல் சொரிகின்ற அருவிகளில் மணிகள் விழுகின்றனவாம். அவற்றைக் கண்டு அது கொள்ளிவட்டம் என்று யானைகளும் பாம்புகளும் ப்ரமித்து நடுங்குகின்றனவாம். இவ்வளவு இயற்கைச் சூழலில் ஸ்ரீநிவாஸன் நித்யவாஸம் செய்யும் திருவேங்கடமலையை உடன்கூடுவது என்றுகொலோ என்றேங்கி கூடலிழைத்து வருகின்றேன் என்று பாடுகிறார். இரட்டையிரட்டையாகச் சிலவற்றைக் கூட்டி எண்ணி ஒற்றையாக மிகாமலிருக்கிறதா எனப்பார்ப்பது கூடலிழைத்தல்.

அடுத்த பாசுரத்தில் வேதம் முதற்கொண்டு அனைத்து நூல்களிலும் தெய்வமாக அறியப்பட்ட தத்வம் பெரியபிராட்டியாரும் அவளுடைய கேள்வனும். அந்த இருவரையும் வரித்து அவர்களின் திருவடிகளை அடைந்து வலைப்பட்டதனால் ஏதோ ஒரு குன்றை நோக்கி 'வேங்கடம்' என்று பாடினேன். அந்த திவ்ய தம்பதிகள் அந்த பாட்டைக் கணிசித்து, திருமலையையே தனக்கு வீடாக்கினர் என்று போற்றுகிறார்.

**திருவோணத் திருவிழவின் பெருமையும், வேங்கடத்தை அடையும் பயனும்**

எனது மனதில் ஆசைப்பட்டுப் புகுந்து எழுந்தருளிய திருவேங்கடத்தானே! கல் அருவியிலிருந்து முத்துக்கள் உதிரும்படியும், புரட்டாசித் திருவோணத் திருவிழவில் அடியார் குழாம் குழாமாகக் கூடிக் 'கோவிந்தா' என்று நாம ஸங்கீர்தனம் பண்ணும் உன்னுடைய திருவேங்கடமலையை அடைந்து காண்பதில் பற்றுள்ளவனாகிறேன் என்று ஆழ்வார் அநுபவிக்கிறார்.

பெண்ணுலாம்சடையினானும், பிரமனும், தத்தம் அதிகாரம் பெறுவதற்காக, திருமலையப்பனின் திருவடிகளிலே புஷ்பங்களைச் சமர்பித்துத் துதிக் கின்றனர். மிகவும் உயர்ந்துள்ள திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் திருமால் தன்னுடைய நீர்மையினால் அவனை அண்டியவர்களின் பாவங்களை போக்குபவன். ஆகவே, அன்பர்களே! நீங்களும் அந்தத் திருமலையை அடைந்து அவனை வணங்குங்கோள் என்று திருவேங்கடத்தை அடையும் பயனை உலகத்தாரைக் குறித்துக் கூறுகிறார்.

**விண்ணவர் பணிவிடை செய்யும் வெற்பு**

அடுத்த பாசுரத்தில் தாமரை மலரில் அமர்ந்தவனான பிரமனும், சந்த்ரசூடனான ருத்ரனும், மேகங்கள் தங்கும் உச்சியையுடைய திருவேங்கட மலையை உடையவனான எம்பெருமானை தினமும் ஸந்த்யாகாலத்தில் சாந்தொடு விளக்கம், தூபம், குடை முதலிய வஸ்துக்களையெல்லாம் கொண்டு தாங்களே திருவந்திக் காப்பு ஸமர்பிக்கின்றனர் என்று அவர்கள் பணிவிடை செய்யும் பாங்கை அருளுகிறார்.

நான்முகன் திருவந்தாதி 44-ம் பாசுரத்தில் இப்படி தேவதைகள் பலரும் வணங்கும் திருமலையை சிறு ப்ராயத்திலேயே சென்று வணங்க வேண்டும் என்று உலகோர்க்கு எடுத்துறைகிறார்.

இப்பாசுரத்தில் ராவணவன் வரம்வேண்டி பிரமனைக் குறித்துத் தவம் செய்யும்

ஸமயம் பகவான் அந்த பிரமனின் தொடை களில் சிறுகுழவியாய்ச் சயனித்துக் கொண்டு தன்னுடைய திருவடியால் பத்து விரல்களையும் எண்ணி அந்த பத்துதலை ராவணன் தன்னாலேயே ஸம்ஹரிக்கப் படுவான் என்பதை ஸூசித்துக் காண்பித்தான் என்று ராமாயணம் எனும் மஹாகாவ்யங்களில் மஹரிஷிகளுக்கும் எட்டாத எம்பெருமானின் இந்த லீலாவதாரத்தை மயர்வற மதிநலம் பெற்ற பக்திஸாரர் அத்புதமாக அருளிச் செய்கிறார்.

**விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு**

அவன் திருவடிகளில் வாத்ஸல்யம் கொண்டு மலர்களைச் சமர்ப்பித்து மங்களாசாஸனம் பண்ணி எல்லாவிடத்திலும் காணும்படி ஸ்வயம்வ்யக்தமாகி எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் குளிர்ந்த அருவிகளின் பொன்மலையே, நித்யஸூரிகளுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் எப்போதும் வேண்டிய நிதியாய் இருக்கும் என்று போற்றுகிறார்.

மேலும் திருமலையுச்சியில் இருக்கும் சந்திரனை திருமாலுக்கு நந்தாவிளக்காக ஸமர்ப்பிக்கும் பொருட்டு யானை தன் தும்பிக்கையைப் பிடிப்பது போல் நீட்டுவதாகவும், வேடுவர்களும், குறவர் களும் அவ்வானையைப் பிடித்து வசப் படுத்தினால் எம்பெருமான் ஸந்நிதியில் அவ்வானையை கைங்கர்யத்திற்குப் பழக்கிப் பயன்படுத்தாலாம் எனக்கருது வதாகவும் கவிதைச் சுவைபட எடுத்துரைக்கின்றார்.

## தேசிக மொழி

பெருகிவரும் நதிகளில் எம்பெருமான் பொற்கழலால் அளக்கும்பொழுது அவன் திருவடிகளில் இருந்து பெருகிய கங்கையும், ஏழு ஸமுத்ரங்களுள் திருமால் உகந்ததுவும் திருமகள் அவதரித்ததுமான திருபாற்கடலும், சங்குகளில் அவ்வெம்பெருமான் ஏந்தும் பாஞ்சசன்னியமும், புஷ்பமாலைகளுள் அவன் விரும்பி அணியும் மிகவும் குளிர்ந்த தான திருத்துழாயும், எங்களுடைய ப்ரபந்ந குல கூடஸ்தாரான நம்மாழ்வாருமே இவ் வுலகில் சிறந்தவை ஆகும் என்று நிச்சயித்து அநுஸந்தித்த நல்ல உபதேசங்களை நாம் அங்கீகரித்து நடத்துகின்றோம்.

- ப்ரதான சதகம்



யாளி எனும் மிருகத்தையும், பலமுள்ள சிங்கங்களையும், முத்துக்களையும், பூத்த மரங்களையும், பல மணிகளானவை அருவிகளோடு போட்டியிட்டுப் புரண்டுவரும் இடமான காட்டையும், வானரங்களையும், வேடர்களையும் உடையதான திருவேங்கடமே மணிவண்ணான திருமால் உகந்தத் தலம் என்றும் ஆழ்வார் பாடுகிறார்.

இவ்விடத்தில் ஸ்ரீஅபிநவதேசிகன் உத்தமூர் ஸ்வாமி, ஸ்ரீவைகுண்டத்தில் ம்ருகங்களும் மரங்களும் இருக்கு மாயினும் வேடர், குறவர் போன்றோர் கிடைப்பது அரிது என்றும் அவர்கள் திருவேங்கடத்திலேயே உளர் என்றும், வைகுந்தம் பாவம் கழிந்தாரைக் கொள்ளுமிடம் என்றும் திருவேங்கடம் பாவம் செய்தோரின் பாவங்களைக் கழிக்குமிடம் என்றும் திருவேங்கடத்தின் பெருமையை மிகவும் நயம்படப் பொருளுரைக்கிறார்.

**திருவேங்கடமே அனைவருக்கும் ஆச்ரயம்**

இந்தத் திருவந்தாதியில் 48-ம் பாசுரத்தில் ஆழ்வார், நித்யஸூரிகள் உண்மையாகவே தொழுகின்ற திவ்யதேசமும் திருமலையே என்றும், வேம் (வினைகள் கஷ்டங்கள்) + கடம் (எரித்தல்) அதாவது நம்வினைகளை எரித்து நமக்கு நற்கதி உய்விக்கும் திவ்யதேசம் வேங்கடமே என்றும், அசுரர்கள் வீய, கையில் அனலாழி ஏந்தி தேவலோகத்தில் உள்ளோரையெல்லாம் காக்கின்ற எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்ரம் அந்தத் திருவேங்கடமே என்றும் வேங்கடத்தின் பெருமையை கூறிப் பத்துப் பாசுரங்களினால் ஸ்ரீநிவாஸனை மங்களா சாஸனம் செய்தருளிகிறார்.

மேலும் இதேப் ப்ரபந்தத்தில் 90-ம் பாசுரத்திலும் பரமபதத்தை அடையவிரும்பும் எல்லோரும் அந்த மோக்ஷத்தை அளிப்பவனான வேங்கடேசனைத் தொழும் பாகவதர்களுக்குச் சேவை செய்தால் நிச்சயமாக அந்த ஸ்ரீவைகுண்டத்தை அடையலாம் என்றும் அறிதியிடுகிறார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த திருமழிசையாழ்வாரின் திவ்ய ஸ்ரீஸூக்திகளைக் கற்று, திருவேங்கடமுடையானிடம் பக்தி செலுத்தினால் நாம் உயர்நிலை எய்தலாம்.





அத்யயன உத்ஸவம் - பகல்பத்து







பகல்பத்து சாற்றுமுறை - ஸ்ரீமத் அழகியசிங்கர் மங்களாசாஸனம்







ஸ்ரீ:

கண்ணுக்கினியன



பகல்பத்து சாற்றுமுறை - ஸ்ரீமத் அழகியசிங்கர் மங்களாசாஸனம்







வைகுண்ட வாசல்







வைகுண்ட ஏகாதசி உத்ஸவம்













**அத்யயன உத்ஸவம் - இராப்பத்து**
















பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தின் ஆராத்ய மூர்த்தி ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுக்கு டோலோத்ஸவம்

















டோலோத்ஸவத்தில்
திருப்பாவை உபந்யாஸம்



# Significance of drawing Kolam

A Temple routine involves several divine services such as Archaka Kainkaryam, Thirumadaippalli Kainkaryam, Adhyapakam and Veda Parayanam, Sripaadha Kainkaryam, drawing Kolam, etc. The last-mentioned is also very much a service to God.

Kolam can be described as a confluence of form, colour and beauty and it is a symbol of auspiciousness and divinity. It implies honouring, saluting, welcoming God and expressing gratitude to Him. Kolam enables to channelise positive energies and destroy negative vibes.

For doing such a vital Kainkaryam, our Temple has a host of dedicated and enthusiastic Women Volunteers, spanning between the age groups of 10 to more than 60 years, and the members of the Kolam Group sincerely carry out the work in the wee hours and also in the evenings, on a daily basis. They come up with thematic Kolams for important festivals and special events. Their recent works on Karthikai Deepam, Lord Rama and Sri Andal Naachiar were well appreciated by all devotees.

**R. Mugunthan**
Trustee



# 5. Sri Daya Sathakam

Sri U.Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

'Prapadhye' for a perfect start. That is Sri Daya Sathakam for us. The word here means '(I) surrender'. It cannot get more personal and more emphatic than this. Personal because of the use of the first person and emphatic because of announcement of the action. A classic case of preaching and practice treading the same path. Can one ask for a better example of 'leading by example'!

In this Sthothra, Swami Desika lays emphasis on Saranagathi (whole-hearted surrender) to the Lord and the other theme that stands out is the Lord's mercy.



The hallmark of this hymn is its astounding poetic excellence - be it structure, content, variety, versatility, style, language, eloquence, proportion, consistency or authenticity. It is divided into ten decads (a decad comprises 10 Slokas). Each one is set to a different meter and similarly each decad brings out a particular meaning associated with the divine attributes of Sri Venkatesa that blossom as His Daya.

Daya translates to compassion or mercy and Sathakam is a century (of verses). In this hymn of 108 Slokas, Swami Desika personifies Thiruvenkatamudaiyan's compassion as a goddess (Daya Devi). That the author has structured the hymn as if he is talking to Daya Devi adds to the beauty of the work, which is a splendid study in the redemption of man by the Lord's mercy.

Though the Lord's virtues are innumerable, Sri Desika considers His Compassion for His devotees as the foremost. The reason is simple. More than any other virtue, His compassion is instrumental in the redeeming the devotee (jeevaathma). That our Acharya chose this virtue to compose a Sathakam is further testimony to its importance.

After surrendering himself to Lord Srinivasa of Thirumala in the opening verse, Swami Desika pays tribute to the Acharya Parampara. Then he salutes the Azhwars, sages such as Parasara, followed by Vishvaksena and Sri, Bhoomi and Neela Pirattis before setting out to describe in detail the greatness of His profound mercy.

In Sloka No. 30, the author calls himself the 'emperor of sins' and addresses Daya Devi as the 'monarch of all virtues'. "Knowing this well, you must redeem me by placing me at the feet of Lord Srinivasa", he pleads with Her. Humility of the highest order from a gem of an Acharya!

A dual connotation is brought out in Sloka No. 60 wherein a set of attributes has been aesthetically employed so as to fit both Daya Devi as well as one's Acharya.

The ninth decad is dedicated to the ten Avatharas. Here, Swami Desika sees Daya Devi through the incarnations and exclaims at the great deeds of the Avatharas as they were done by Her.

The hundredth Sloka (Natha: Param) can be termed as the highlight of this hymn. The great Acharya seeks Daya Devi's Divine intervention so that Lord Srinivasa would bless him with the experience that the residents of Parama Padham (Mukthas) enjoy there, at Thirumala itself.

Revealing genuine modesty in another instance, our Acharya says that he is a child and unqualified to compose a hymn like this. But the Lord's playfulness had resulted in his elevation to the stature of 'Vedanthacharya'. It is really He who composed this hymn through him and that he is only an instrument, like the Veena. (Can it take the credit for the melodious music that pours from it? Is it not the player that actually creates the melody?) - Sloka 104.

Umpteen such aesthetics (Rasaanubhava) are there for the asking in this hymn, making it a sumptuous feast. A share of fill from this will do a world of good to our mind.

As for the Phala Sruti, those who recite this Sthothra will have the absolute blessings of Lord Srinivasa and, with that, all the good fortunes.

***To be continued...***

ஸ்ரீ:

# பஞ்ச ஸ்தவம்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

ஸ்ரீவத்ஸாங்கர், ஸ்ரீவத்ஸசின்ஹர், ஸ்ரீ கூரத்தாழ்வான் என்ற திருநாமங்களை உடைய முக்குறும்புகளை – (கர்வத்தைக் கொடுக்கும் ஜனித குலம் (வம்சம்) , கற்ற கல்வி, பெற்ற செல்வம்) அடக்கிய ஆசார்யர் காஞ்சீபுரம் ஸமீபத்தில் உள்ள கூரம் என்னும் அக்ரஹாரத்தில் தை - ஹஸ்தம் திருநாளில் அவதரித்தார்.

அந்தமிலா ஆரணங்களின் ஆழ்பொருளை ஆராய்ந்து, நமக்கு கையில் கனியென்ன தமிழ்மறைகளாய் ஆழ்வார்கள் கொடுத்தனர். பகவத் அநுபவங்களில் ஆழ்ந்து இருந்ததால் ஆழ்வார்கள் என்று வழங்கப்பட்டனர். அவ்வண்ணமே இந்த கூரம் உதித்த வள்ளலும் பகவத் குணங்களில் ஆழ்ந்து இருந்ததால் கூரத்தாழ்வான் என்று அழைக்கப்பட்டார். பகவத் பாஷ்யகாரரின் சிஷ்யர்களில் தனித்து விளங்கியவர். ஸஹஸ்ரநாமம் (ஸ்தோத்ரம்) எத்தனையோ தேவதைகளுக்கு இருந்தாலும், ஸஹஸ்ரநாமம் என்றாலே ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் தான் குறிப்பிடப்படுகிறது, அதே போல் ஆழ்வான் என்றால் ஸ்ரீகூரத்தாழ்வானையே குறிக்கும்.

ஆழ்வானின் பஞ்சஸ்தவம் - பக்தி, ப்ரேமம், ஸ்துதி, வேதாந்தம், பகவத் குணாநுபவம் ஆகியவைகளின் அபூர்வ கலவை ஆகும்.

ஸ்தவம் என்றால் பாராட்டு, புகழ் பாடுதல் என்று பொருள். பஞ்ச ஸ்தவம் – ஐந்து விஷயங்களைப் பற்றி புகழ் பாடுதல். ஸ்ரீவைகுண்ட ஸ்தவம், அதிமானுஷ ஸ்தவம், ஸுந்தரபாஹு ஸ்தவம், வரதராஜ ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம் என்று பஞ்ச ரத்னங்களாக மிளிர்கின்றன.

ஸ்ரீ கூரத்தாழ்வான் தனியன்

*ஸ்ரீவத்ஸசிந்ஹ மிச்ரேப்ய: நம உக்திம் அதீமஹே|*
*யதுக்தய: த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸுத்ரதாம்||*

இங்கு வேதங்களை ஸ்த்ரீலிங்கமாகக் (வேத மாதாவாக) கொண்டாடுகிறார் ஸ்ரீ பராசர பட்டர். (த்ரயீ, மங்களஸூத்ரதாம் என்ற பதங்களின் ப்ரயோகத்தினால் வேதமாதாவைக் குறிக்கிறார் - பெண்பால் ஸ்பஷ்டமாகிறது) குழந்தையிடம் / குழந்தைகளிடம் பரிவுடையவள் மாதா (அம்மா / ஜனனீ / தாயார் / பெற்றவள்). அப்படிப்பட்ட குணம் கொண்டவள் வேதமாதா. பரிவே உருவான வேதமாதாவின் கழுத்தில் திருமாங்கல்ய கயிறு / சரடு போல உள்ளனவாம் ஸ்ரீகூரத்தாழ்வானின் அருளிச்செயல்கள்.

ஏன் வேதமாதா என்று பட்டர் அருளினார் என்று சற்றே நோக்குகையில், - அவள் பாதிவ்ரதை - அதாவது அவளுக்கு (வேதத்திற்கு) கணவன் வேதவேத்யனான ஸ்ரீஹரி ஒருவனே என்று சுட்டிக்காட்டுவதற்காக!

மிச்ரர் (மிச்ரேப்ய: என்று பஹுவசனம்) என்பதனால் மரியாதைக்குரியவர் / கௌரவத்திற்கு உரியவர் என்று பொருள். இப்படிப்பட்ட கூரத்தாழ்வானுக்கு நமஸ்காரங்கள்

**தனியனின் திரண்ட பொருள்:** எவருடைய ஸ்ரீஸூக்திகள் வேதமாதாவின் கழுத்தில் திருமாங்கல்ய சரடாக உள்ளனவோ, அப்படிப்பட்ட ஸ்ரீவத்ஸ சிந்ஹருக்கு நமஸ்காரங்கள்.

## ஸ்ரீவைகுண்ட ஸ்தவம்

**ஆசார்யர்களுக்கு நமஸ்காரங்கள்**

முதற்கண் நமஸ்காரங்களை தம் ஆசார்யரான உடையவர்பாலும், ப்ரபந்ந ஜனங்களின் கூடஸ்தரான - பகவத் போதாயனருக்குப் பிறகு சாரீரக மீமாம்ஸ சாஸ்த்ர ஸூக்ஷ்மங்களை நமக்கு விளக்கி வைகுந்தமேறி ஜனங்களை உஜ்ஜீவிக்கவே இரங்கிய திருமாலால் அருளப்பட்ட சடகோபர்பாலும் செய்கிறார்.

ஆசார்யாநுக்ரஹம் தேவை. ஆசார்யனின் கடாக்ஷம் எதையும் கைகூடச் செய்யும் என்று நமக்கு வழிகாட்டுவது போல் உள்ளன இந்த ச்லோகங்கள்.

உடையவரின் பதப்ரயோகங்கள் வேதத்தை ஒத்திருப்பது போல, ஆழ்வானும் ஆசார்யனின் நடையை ஒத்து வேதத்தில் உள்ள பதங்களை ஆங்காங்கு ப்ரயோகித்துள்ளார்.

**ஜ்யோதி - தேஜஸ்**

தேஜஸ்ஸைப் பாடுகையில் அந்த தேஜஸ்ஸானது தோன்றி மறைவது என்றில்லாமல், நிரந்தர தேஜஸ்ஸாக உள்ளது (நாராயண பரோ ஜ்யோதி: என்று வேதமும் பரஞ்சோதி நீ பரமாய் என்ற திருவாய்மொழியும் பாடும் வகையில்) யாராலும் ஏற்றப்பட்டதும் அல்ல - தன் ஸங்கல்பத்தால் பொலியும் ஜ்யோதி. அத்விதீயம்; இரண்டாவது - நிகரானது - ஒப்பானது ஒன்றில்லாத (அத்விதீயம் - த்விதீயம் என்றால் இரண்டாவது, அத்விதீயம் என்றால் இரண்டாவது இல்லாத) ஜ்யோதி ஸ்ரீமந் நாராயணன் (மற்றோர் பரஞ்சோதி இன்மையின் படியோவி நிகழ்கின்ற).

இந்த ஜ்யோதியாய் மிளிரும் திவ்ய மங்கள விக்ரஹமே வணங்கத்தக்கது என்றபடி ச்லோகங்கள்.

**ஆழ்வானின் வியப்பு**

பெருமாளின் வாத்ஸல்ய குணம் அடியவர் பிழைகள் நின் கருத்தடையாது என்று தோஷங்களைக்



காணாமல், அவைகளை ஒரு பொருட்டாகக் கருதாமல் தஞ்சமடைந்தவர்களுக்கு மெய்யனாய் நின்றருள்வது. இதுவல்லவா குணம்! என்று வியக்கிறார்.

**எது சிறந்தது?**

ஆபாஸபூயமான (இருப்பது போல் உள்ள, ஆனால் உண்மையில் இல்லாத) ஆகமங்கள் பலவிருக்க பகவானின் ஆக்ஞைகளான வேதங்களே சிறந்த ப்ரமாணங்கள், போற்றத்தக்கவை - வேதமார்கமே சிறந்தது, ஹிதத்தை அளிக்கவல்லது.

**புருஷ ஸூக்த மஹிமை**

எப்படி நாராயணன் உத்தமனோ, அவனைப் பற்றிப் பேசும் புருஷ ஸூக்தம் உத்தமமானது. ஏனெனில், அசைக்கமுடியாதது, தெளிவானது, குற்றமற்றது, குதர்க்கத்திற்கு இடமளிக்காதது, பகவானின் திருநாமத்தை உடையது.

**அதிமானுஷ ஸ்தவம்**

தனித்துக்காட்டும் தன்மைகள் - ஸாமான்யர்களுக்கும், முழுவேழுலகுக்கும் நாதனான வேதமயனுக்கும் உள்ள வித்யாஸங்கள் எண்ணிலடங்கா. அவற்றுள் சிலவற்றை திவ்ய அவதாரங்களில் அநுபவிக்கிறார்.

அவதார விஷேசங்களை அறிய முற்படும் க்ஷணமே, பகவானின் குணங்கள் நன்கு விளங்கும்.

**விக்ரமம்**

‘உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல் எல்லாம், என்னுடைய நெஞ்சகம்பால் சுவர் வழி எழுதிக் கொண்டேன்’ என்று பெரியாழ்வார் எத்தும் வண்ணம் பகவானுக்கே உரிய பல குணங்களில் விக்ரமம் - இராவணனின் கோட்டையான இலங்கையில் புகுந்தது.

**சேஷ்டிதம்**

முடியாத விஷயத்தை செய்து காட்டுவது - அஸாத்யமான செயல்களை ஸாத்யமாக்குவது - அகடிதகடநீயனாய் இருப்பது – ‘அம்மைத்தடங்கண் மட ஆய்ச்சியரும் ஆனாயரும் ஆநிரையும் அலறி சரண்’ என்று தஞ்சம் அடைந்தபோது குன்றமொன்று எடுத்தேந்தி மாமழை அன்று காத்தது.

**சீலம்**

சீலம் என்ற சப்தத்திற்கு பல பொருள்கள் (பழக்கம், அழகு, வடிவு, ஒழுக்கம், ஒருவிதமான குணம், பண்பு). ‘சீலம் எல்லையிலான்’ என்றாரே நம்மாழ்வார்! வாக்கிலிருந்து மாறாத ஸத்ய ஸங்கல்பன். ஒழுக்கத்தின் உச்சகட்டம் வாக்கு மாறாமை – ‘மாம் ஏகம் சரணம் வ்ரஜ, மோக்ஷயிஷ்யாமி மா சுச:’ என்ற வாக்கை அளித்து அதிலிருந்து வழுவாமல் நின்று இன்பக்கதி செய்பவன்.

**லீலைகள்**

மூவடிமண் வேண்டிப் பெற்ற த்ரிவிக்ரமாவதாரத்தில், பெருமாள் திருவடிக்கு சதுர்முகர் திருமஞ்சனம் செய்தார். அந்த சேஷ ஜலத்தை சிரஸ்ஸில் ஸ்வீகரித்த ருத்ரன் மங்களம் பெற்று சிவன் / சங்கரன் ஆனார் (சம் கரோதி இதி சிவ: / சங்கர: – மங்களத்தை உண்டாக்குபவர் சிவன், இந்த லீலையினாலேயே ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீஹயக்ரீவன், ஸ்ரீந்ருஸிம்ஹன் திவ்ய நாமங்களில் சிவ: என்பது ஒன்று).

**எம்பெருமானின் எளிமை**

ப்ராஹ்மண ப்ரியனான எம்பெருமான், ராம க்ருஷ்ண அவதாரங்களில் வேறுகுலங்களிலேயே அவதரித்தான். ஆதித்யர்களில் விஷ்ணுவாய் மிளிர்கிறான். இறங்கிவந்து செய்த அவதாரங்கள் – அவ்வவதாரங்களின் சாதனைகள் எல்லாம் நமக்காகவே, இந்த எளிமையானது வியப்பூட்டுகிறது. நம்மாழ்வாரின் ‘எனக்கு எளியன் எம்பெருமான் இங்கு’ என்ற அருளிச்செயல் ஸ்மரிக்கவல்லது.

**பகவத் ஸம்பந்தமே ஸத்**

ஸ்ரீராகவனின் ஸம்பந்தம் பெற்ற (நற்பால் அயோத்தில் வாழும் சராசரம்) மரம், புல், செடி எல்லாம் வைகுந்தம் ஏறின. உன் திருவடி ஸ்பர்சம் ஒன்றாலேயே அவைகள் ஸத்தை அடைந்தன. உன் குணமழையில் நனைந்து போன அயோத்தி வாழ் மரங்கள், நீ அயோத்தியை விட்டு வெளியேறிய பிறகு, வாடின. வர்ஷாருதுவில் நல்ல மழை பெய்தும் அவை சோர்ந்தே இருந்தன. உன் குணங்களில் ஈடுபடுவதே ஸந்மார்கம்.

**ஸுந்தரபாஹு ஸ்தவம்**

அரங்கத்தரவணைப் பள்ளியான் மேல் ஆறாத காதல் கொண்டவர் கூரேசர். உடையவருடன் ஸ்ரீரங்கத்தில் பல கைங்கர்யங்களில் ஈடுபட்டார். சைவ மத வெறி அதிகம் இருந்த சோழனால் நேத்ரம் இழந்து, திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளினார் ஆழ்வான். ‘ஸுந்தரத் தோளுடையான்’ என்று ஆண்டாள் இட்ட நாமமே ‘ஸுந்தரபாஹு’ என்று வழங்கப்படுகிறது. ‘தேன் கொண்ட சாரல் திருவேங்கடத்தானை, நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே’ என்று கலியன் அநுபவித்தது போல் அழகரை அரங்கனாகச் சில இடங்களில் அநுபவிக்கிறார். அரங்கன் நடை கம்பீரம், அதேபோல் அழகரை அரங்கனாக, வேங்கடத்தானாக, தேவப்பெருமாளாக அச்பவிக்கும் வகையில் பதப்ரயோகங்கள் கம்பீரம்.

**சிலம்பாறின் பல விதமான ஓட்டங்கள்**

ஒரு விசேஷ ஸம்பந்தம் ஏற்பட்டால், நாம் அதிக உத்ஸாஹம் அடைவதுண்டு. அவ்வமயங்களில் சற்றே மாறுபட்டு இருப்போம். நூபுர கங்கை எனப்படும் சிலம்பாறு சில இடங்களில் குறுகியும், சில இடங்களில் விரிவாகவும், சில இடங்களில் அருவியாகவும், சில இடங்களில் அமைதியாகவும், சில இடங்களில் மிகுந்த ஓசையுடனும் ஓடுகிறது. ஏன் இவ்வளவு வித்யாஸங்கள்? அழகனின் தொடர்பு ஏற்பட்டதால் மிகுந்த உத்ஸாஹம். அவனை அநுபவித்துக் கொண்டே ஓடுதலால் இவ்வளவு மாற்றங்கள்!

**ஆழ்வானின் ஆழ்வார் பக்தி**

சிலம்பு என்றால் கல், மலை என்று பொருள் படும். ‘நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன் மாறன் சடகோபன்’ என்றபடி வாடாத மகிழம்பூ மாலையை அலங்காரமாகச் சூடியுள்ளார் நம்மாழ்வார். ஆழ்வார் அருளிச்செயலான திருவாய்மொழியை ஸ்வரம், தாளங்களுடன் பாவத்துடன் அநுபவித்து மலை அடிவாரத்தில் (சிலம்படிவாரத்தில்) பாடுகின்றனர் கின்னரர்கள். இதில் மலை உருகி சிலம்பாறாகப் பெருகுகிறது. மலையை உருக்கும் நம்மாழ்வார் அகடிதகடநீயர், அவரின் அருளிச்செயல்களின் மஹிமை சொற்களில் அடங்கா.

**திருமலை – திருமாலிருஞ்சோலை மலை**

வானவர் தங்கள் சிந்தை வடமலையாம் திருவேங்கடம் பால் இருக்கிறது. அவர்களுக்கு (தேவர்களுக்கு) உன்னைப் பூசிப்பது தொழில்.

தெற்குத்திருமலையில் (திருமாலிருஞ்சோலை மலையில்) என்னைப் போன்று அடிமைத்தொழில் பூண்டவர்களுக்கு என்றே இருக்கிறாயோ?

**அழகனே அரங்கன் – அரங்கனே அழகன்**

‘அம்பஸ்ய பாரே புவனஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்டே மஹத: மஹீயான்’ என்று வேதம் எம்பெருமானின் திவ்ய ஸ்தானங்களைப் போற்றுகிறது. பாற்கடல் மத்தியில் பாம்பணைப் பள்ளிகொண்டாய். அந்த திவ்ய ஸேவையை வம்பார் புனல் காவிரிக்கரையில் ஆதிசேஷன் மீது பள்ளிகொண்டு ஸாதிக்கிறாய். நால்வேதக் கடலமுதாய் திருமாலிருஞ்சோலையில் காட்சி தருகிறாய். இங்கு வந்து உன்னை அரங்கனாகக் கண்டு கொண்டேன், இனிப்போக விடுவதுண்டே!

**வரதராஜ ஸ்தவம்**

அர்ச்சாநுபவம், ப்ரபத்தி மணம் வீசும் வரதராஜ ஸ்தவம் முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சியின் அதிபதியான ஸ்ரீதேவப்பெருமாள் விஷயமான ஸ்துதி. உடையவரின் கட்டளை பேரில் காஞ்சீபுரம் திரும்பிய ஆழ்வான், அருளாளரை பாதாதி கேசமாய், தேவதா ஸார்வபௌமனாய் ஸ்தோத்ரம் செய்யும் பாங்கு சிற்றின்பம் இசையாதார்க்கு இனிது.

**அத்திகிரி அருளாளன் மங்களகரன்**

நிஸ்ஸமாப்யதிகனான, அதாவது ‘ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயன்’, அருளாளர் தாம் எனினும் தமக்கொவ்வாரே



(தனக்கு எவரும், எதுவும் ஒப்பு இல்லை - தன்னைவிட மேம்பட்டவரும் இல்லை) பகவான், ஆச்ரயித்தவர் துயரை அறுப்பவன். அதன் மூலம் மங்களங்களை அருள்பவன். ஸ்வயம் மங்களகரமானவன்.

**வேதங்கள் ஹஸ்திகிரியின் கொடிகள்**

கரிகிரி ஒரு மரம். அருளாளனின் அருளால் மரத்திலிருந்து கிளைகள் தளிர்விடுகின்றன. கிளைகளைத்தழுவும் கொடிகளே வேதங்கள் கொடிகளுக்குப் பல கிளைகள் (வேத சாகைகள் - உட்பிரிவுகள்) இதற்கு நடுவுள் சுடர்மிகு சுருதியுள் நிற்கும் சுரன் வரதன்

**ஸந்தேஹ நிவாரணன் வரதன்**

பிடிவாதம் பிடிக்கும் குத்ருஷ்டிகளின் வாதம் ப்ரஹ்மமானது குணங்கள் அற்றது, சில சமயம் சில குணங்கள் கொண்டது என்று. இப்படிப்பட்ட காணாதர் வாதங்களை கழற்ற, அவர்களின் குழப்பம் தீர அத்திமாமலை மேல் நிற்கும் அச்சுதனான உன்னை ஸேவித்தால் போதும். தெளிவுறுவர்!

**ரக்ஷகன் வரதன்**

அவதாரங்கள் எடுத்து தர்மங்களை நிலைநாட்டினாய். நீ அவதாரங்கள் எடுக்காமல் இருந்திருந்தால்? அர்ச்சை இல்லை என்றால்? வேதங்கள் ப்ரயோஜனமில்லாமல் ஆகியிருக்கும். ப்ரஹ்மமானது உள்ளதா என்ற ஸந்தேஹம் பெரிய தீயாய் வளர்ந்திருக்கும். தேவ கார்யங்கள் நின்று போயிருக்கும். நல்லவேளை இவை எல்லாம் நடக்காத படி அவதாரங்கள் செய்து ரக்ஷித்து, அத்திமாமலை மேல் புண்ணியனாய் நிற்கிறாய்.

**ஸ்ரீஸ்தவம்**

'திருமகளார் பிரியா திருமால் அன்றி நற்சரணே' என்றபடி பிராட்டி மூலமே (உபாயம், உபேயம், புருஷகாரம் என்று) பகவானிடம் ப்ரபத்தி அநுஷ்டிக்க வேண்டும். இந்த ஸ்துதியில் பிராட்டியின் பெருமைகளைப் பாடுகிறார் ஆழ்வான்.

**நன்மைகளை அருள்பவள் பிராட்டி**

பகவான் ஸ்வதந்த்ரன் அல்லன். புண்யர்களுக்கு ஸ்வர்கம், பாபிகளுக்கு நரகம் - சரணாகதி செய்தவர்களுக்கு மோக்ஷம் என்று பிராட்டியின் திருமுக ஜாடைகள் மூலம், அவள் சொல் மீறாமல், அவள் திருவுள்ளப்படி அரசாள்கிறான். இருவரும் ஸமமாக லீலா ரஸத்தை அநுபவிக்கின்றனர். இப்படிப்பட்ட பிராட்டி நன்மைகளை அருள வேண்டும்.

**அளவற்ற ஆரமுதக் கடல்**

ஸ்தோத்ரம் என்றால் புகழ் பாடுதல். அல்ப பலன்களை நோக்கி கவிகள் பாட்டுக்குரியாதவர்களின் மீது பாடல்கள் இயற்றுவர். இல்லாததைக் கூறுவர். உன் விஷயத்தில் என்னவென்று பாடுவது? அளவற்ற குணங்களின் இருப்பிடம் நீ. இது தான் என்றும் பாட முடியாதே! உன் விஷயத்தில் வாசஸ்பதியான ஸ்ரீ ஹயக்ரீவனும் அசக்தன் தான்!

**உன்னைப் பாடுவதில் வெட்கம் இல்லை**

தாகம் உள்ள சதுஷ்பாத ப்ராணி கங்கை நீரை தன் நாக்கால் நக்கி பானம் செய்து தன் தாகத்தை தீர்த்துக் கொள்கிறது. ப்ராணிக்கு வெட்கம் இல்லை. கங்கைக்கு தோஷமும் வராது. அதே போல் அல்பனான நான் உன்னை வெட்கமில்லாமல் பாடுகிறேன். உன் புகழை ஸ்தோத்ரம் மூலம் பருக விரும்புகிறேன். நீ என்னைப் பார்த்தால் போதும் தேவீ!

**அறிவின் உறைவிடம் பிராட்டி**

அறிவற்றவனை மரம் என்பதுண்டு. அறிவு மிகுந்தவர் ப்ருஹஸ்பதி. ஸரஸ்வதி தேவியின் அருள் பெற்று விளங்குபவர் ப்ருஹஸ்பதி. ஆதலால் அறிவை அருள்பவள் ஸரஸ்வதி. ஸரஸ்வதி பிராட்டியின் பக்தர்களுக்கு தாஸியாக உள்ளாள். அப்படிப்பட்ட பிராட்டியை போற்றிச் சரணடைவோம்.

கடல் அளவு விஷயங்கள் பஞ்ச ஸ்தவங்களில் உள்ளன. அனைத்து விஷயங்களையும் பற்றி ஒரு வ்யாஸத்தில் எழுதுவது அஸாத்யம். தாஸனின் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

## இசை நிகழ்ச்சிகள்
### தினசரி மாலை 6.30 மணிக்கு

**7.2.2020 வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| கல்யாணபுரம் திரு S. அரவிந்த் | பாட்டு |
| திரு R. ராகுல் | வயலின் |
| மேலக்காவேரி திரு K. பாலாஜி | மிருதங்கம் |

**8.2.2020 சனிக்கிழமை**

| | |
|---|---|
| திரு சுனில் கார்கியன் | பாட்டு |
| திரு B. அனந்தகிருஷ்ணன் | வயலின் |
| தஞ்சாவூர் திரு ராமதாஸ் | மிருதங்கம் |
| திரு S. கிருஷ்ணா | கடம் |

**9.2.2020 ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| திரு பட்டாபிராம் பண்டிட் | பாட்டு |
| திரு T.V. ராமானுஜாசாரிலு | வயலின் |
| மேலக்காவேரி திரு K. பாலாஜி | மிருதங்கம் |

**10.2.2020 திங்கள்கிழமை**

| | |
|---|---|
| திருமதி V. சுமித்ரா | பாட்டு |
| திருமதி R. ஹேமலதா | வயலின் |
| திரு B. கணபதிராமன் | மிருதங்கம் |

**11.2.2020 செவ்வாய்கிழமை**

| | |
|---|---|
| திருமதி நிஷா P. ராஜகோபால் | பாட்டு |
| திரு விட்டல் ரங்கன் | வயலின் |
| திரு N.C. பரத்வாஜ் | மிருதங்கம் |
| திரு S. கிருஷ்ணா | கடம் |

**12.2.2020 புதன்கிழமை**
**மாலை 4.00 மணி**

| | |
|---|---|
| செல்வி R. லக்ஷ்மிப்ரியா | பாட்டு |
| திரு மதன்மோஹன் | வயலின் |
| திரு குரு ராகவேந்திரா | மிருதங்கம் |

**மாலை 6.30 மணி**

| | |
|---|---|
| செல்வி அம்ரிதா முரளி | பாட்டு |
| திருமதி சாருலதா ராமானுஜம் | வயலின் |
| திரு N.C. பரத்வாஜ் | மிருதங்கம் |
| திரு S. கிருஷ்ணா | கடம் |

M.R. நாராயணன் — தலைவர்
N. ராகவன் — உப தலைவர்
கல்யாணபுரம் R. ஆராவமுதாச்சாரியார் — செயலர்
நாதமுனி R. ஸ்ரீநிவாஸன் — துணைச் செயலர்
R. சௌந்தரராஜன் — பொருளாளர்

ஸ்ரீ :

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரம்மணே நம:
ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேதஸ்ரீநிவாஸ பரப்ரம்மணே நம:
ஸ்ரீமத்யை கோதாயை நம:



**ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை மஹோத்ஸவ ஸபா**
Flat, 2, ச்ரேஷ்டா நிர்மல், 6, அபிராமபுரம் முதல் தெரு, சென்னை – 600018.
தொலைபேசி: 9444206473

# 30-வது திருப்பாவை மஹோத்ஸவம்

நடைபெறும் இடம்:
ஸ்ரீ தேசிக பவனம்
வெங்கடேச அக்ரஹாரம், மைலாபூர், சென்னை – 600 004.

நடைபெறும் தேதிகள்:
07.02.2020 முதல் 11.02.2020 வரை
(விகாரி வருஷம் தை மாதம் 24 முதல் 28 வரை)

## நிகழ்ச்சி நிரல்

### 7.2.2020 வெள்ளிக்கிழமை

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| காலை 9.00 முதல் 10.00 வரை | மார்கழி | தேவனார்விளாகம் Dr. S. பத்மநாபாச்சாரியார் ஸ்ரீகார்யம், ஸ்ரீமத் அஹோபிலமடம் |
| காலை 10.00 முதல் 11.00 வரை | வையத்து | Dr. M.V. அனந்தபத்மநாபாச்சாரியார் ஸம்பாதகர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா |
| காலை 11.00 முதல் 12.00 வரை | ஓங்கி | ஸ்ரீ உ.வே. அரவிந்தலோசனன் ஸ்வாமி |

**பகல் 12.00 முதல் பிற்பகல் 3.00 வரை இடைவேளை**

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | ஆழி | ஸ்ரீ உ.வே. G.S. ராஜகோபாலாச்சாரியார் |
| மாலை 4.00 முதல் 5.00 வரை | மாயனை | ஸ்ரீ உ.வே. உத்தமூர் ராஜகோபாலாச்சாரியார் |
| மாலை 5.00 முதல் 6.00 வரை | புள்ளும் | ஸ்ரீ உ.வே. S. ரகுவீர பட்டாச்சாரியார் |

**மாலை 6.30 மணி முதல் இசை நிகழ்ச்சி**

### 8.2.2020 சனிக்கிழமை

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| காலை 9.00 முதல் 10.00 வரை | கீசு, கீசு | ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் N.S. ரங்கநாதாச்சாரியார், |
| காலை 10.00 முதல் 11.00 வரை | கீழ்வானம் | ஸ்ரீ உ.வே. திருவமிந்தை க்ருஷ்ண தேசிகாச்சாரியார் |
| காலை 11.00 முதல் 12.00 வரை | தூமணி | ஸ்ரீ உ.வே. குறிச்சி ரங்கநாதாச்சாரியார் |

**பகல் 12.00 முதல் பிற்பகல் 3.00 வரை இடைவேளை**

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | நோற்று | ஸ்ரீ உ.வே. P.B. ராஜஹம்ஸம் ஸ்வாமி |
| மாலை 4.00 முதல் 5.00 வரை | கற்று | ஸ்ரீ உ.வே. S.N. ஸம்பத்குமாராச்சாரியார் |
| மாலை 5.00 முதல் 6.00 வரை | கனைத்து | ஸ்ரீ உ.வே. பையம்பாடி ராகவாச்சாரியார் |

**மாலை 6.30 மணி முதல் இசை நிகழ்ச்சி**

### 9.2.2020 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| காலை 9.00 முதல் 10.00 வரை | புள்ளின்வாய் | ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்ய நாராயணாச்சாரியார் |
| காலை 10.00 முதல் 11.00 வரை | உங்கள் | ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் வாஸுதேவாச்சாரியார் |
| காலை 11.00 முதல் 12.00 வரை | எல்லே | ஸ்ரீ உ.வே. வேளியநல்லூர் நாராயணாச்சாரியார் ஸம்பாதகர், ஸ்ரீ ரங்கநாத பாதுகா |

**பகல் 12.00 முதல் பிற்பகல் 3.00 வரை இடைவேளை**

## நிகழ்ச்சி நிரல்

### 9.2.2020 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | நாயகனாய் | ஸ்ரீ உ.வே. கூத்தப்பாக்கம் ரங்கநாதாச்சாரியார் |
| மாலை 4.00 முதல் 5.00 வரை | அம்பரமே | ஸ்ரீ உ.வே. கல்யாணபுரம் R. ஆராவமுதாச்சாரியார் |
| மாலை 5.00 முதல் 6.00 வரை | உந்து | ஸ்ரீ உ.வே. V.K.S.N. ராகவாச்சாரியார் |

**மாலை 6.30 மணி முதல் இசை நிகழ்ச்சி**

### 10.2.2020 திங்கள்கிழமை

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| காலை 9.00 முதல் 10.00 வரை | குத்து | ஸ்ரீ உ.வே. அக்காரக்கனி T.A. ஸ்ரீநிதி ஸ்வாமி |
| காலை 10.00 முதல் 11.00 வரை | முப்பத்து | ஸ்ரீ உ.வே. வடுவூர் R. வீரராகவாச்சாரியார் |
| காலை 11.00 முதல் 12.00 வரை | ஏற்ற | ஸ்ரீ உ.வே. K.B. தேவராஜன் ஸ்வாமி |

**பகல் 12.00 முதல் பிற்பகல் 3.00 வரை இடைவேளை**

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | அங்கண் | ஸ்ரீ உ.வே. V.S. கருணாகராச்சாரியார் |
| மாலை 4.00 முதல் 5.00 வரை | மாரிமலை | ஸ்ரீ உ.வே. மங்களம் ஸ்ரீகாந்தன் ஸ்வாமி |
| மாலை 5.00 முதல் 6.00 வரை | அன்று | ஸ்ரீ உ.வே. திருவமிந்தை மாலோல கண்ணன் |

**மாலை 6.30 மணி முதல் இசை நிகழ்ச்சி**

### 11.2.2020 செவ்வாய்கிழமை


| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| காலை 9.00 முதல் 10.00 வரை | ஒருத்தி | ஸ்ரீ உ.வே. வலயப்பேட்டை ராமாச்சாரியார் |
| காலை 10.00 முதல் 11.00 வரை | மாலே | ஸ்ரீ உ.வே. ஒரகடம் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார் |
| காலை 11.00 முதல் 12.00 வரை | கூடாரை | ஸ்ரீ உ.வே. வடகரை விஜயராகவாச்சாரியார் |

**பகல் 12.00 முதல் பிற்பகல் 3.00 வரை இடைவேளை**

| நேரம் | பாசுரம் | உபந்யாஸகர் |
|---|---|---|
| பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | கறவைகள் | ஸ்ரீ உ.வே. புலிக்குன்றம் ஸ்தலசயனாச்சாரியார் |
| மாலை 4.00 முதல் 5.00 வரை | சிற்றம் | ஸ்ரீ உ.வே. உழப்பாக்கம் தேவநாதாச்சாரியார் |
| மாலை 5.00 முதல் 6.00 வரை | வங்க | ஸ்ரீ உ.வே. H.R. ஸ்ரீதராச்சாரியார் |

**மாலை 6.30 மணி முதல் இசை நிகழ்ச்சி**

ஸ்ரீ:



*With Best Compliments from:*

# V.A. Raghu & Family

**25/28, Prithvi Avenue 2nd Street,**
**Prakrithi Apartments,**
**Abhiramapuram, Chennai 600018.**

**SVDD thanks Sri V.A. Raghu & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam











'பத்ததி' மார்கழி இசை விழா - ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் முன்னிலை மற்றும்
ஸ்ரீமதி ப்ரமீளா குருமூர்த்திக்கு 'ஆசார்ய சிரோமணி' விருது வழங்குதல்







'பத்ததி' மார்கழி இசை விழா

